**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**<u>அசல் வழக்கு எண்</u> : 113/2012**

**PW2 – திரு. ரஞ்சித், த/பெ.மூர்த்தி**

**08.01.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**<u>நேரம் 15.05 மணி</u>**

பிராதில் Schedule A to E சொத்துக்கள் எல்லாம் கூட்டுக்குடும்ப சொத்தில் இருந்து வந்த வருமானத்தில் வாங்கிய சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதில் Schedule A, B, E சொத்துக்கள் வாங்குவதற்கு என் தாத்தா பணம் கொடுத்து தான் வாங்கினார் என்பதற்கு ஏதேனும் ஆதாரமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். Schedule A என்பது தண்ணீர்குளம் கிராமம் விரிவாக்கம் சொத்திற்கு எந்த ஆவணம் ஆதாரமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் எதிரில் தான் பணம் கொடுத்தார். மாதம் மாதம் instalment ல் வாங்கினார். Schedule A சொத்து வாங்கும்போது 3ம் பிரதிவாதி சங்கர் என்னவாக வேலை செய்தார் என்றால் அரசாங்கத்தில் Junior Engineer ஆக பணிபுரிந்து வந்தார். Schedule A சொத்து வாங்கும்போது 3ம் பிரதிவாதிக்கு மாதச்சம்பளம் எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு அட்டவணை பி கெட்டினமல்லி சொத்தை 2ம் பிரதிவாதி வாங்கியதற்கு 1ம் பிரதிவாதி காசிராஜன் எவ்வளவு பணம் கொடுத்தார் என்பதற்கு ஆதாரமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த ஆவணத்தில் குறிப்பு உள்ளது. வழக்கு அட்டவணை E சொத்துக்கள் 3ம் பிரதிவாதியின் தாயார் இந்திராணியின் பெயரில் வாங்கப்பட்டது என்று கூறியுள்ளார், அதற்கு என் தாத்தா 3ம் பிரதிவாதியின் தாயாருக்கு பணம் கொடுத்ததற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் தகப்பனார் தமிழ்நாடு கூட்டுறவு

வங்கிக்கணக்கிலிருந்து பணம் எடுத்து கொடுத்தார், ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. என் விசாரணையில் என் பாட்டி குமுதம்மாள் அவருடைய சொத்துக்கள் எல்லாம் 2ம் பிரதிவாதி அன்புச்செல்வி மற்றும் 4ம் பிரதிவாதி யுவராஜன் ஆகியோர்களின் வற்புறுத்துதலால் தான் என் தாத்தா அந்த சொத்துக்களை விற்றார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, இதுகுறித்து என் தந்தையார் பிராதில் அல்லது என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை. கேசி கார்டன் சொத்து குறித்து என் தகப்பானருக்கு என் தாத்தா எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டார், அதற்கு நான் என்னுடைய சாட்சியத்தில் 85 வயதான என் தாத்தா கண் ஆப்ரேஷன் செய்திருந்தார், மேலும் என் தாத்தாவிற்கு விருப்பம் இல்லாமல் யுவராஜன் அழைத்துக்கொண்டு சென்று ரத்துசெய்துவிட்டார் என்று கூறியுள்ளேன், அதுபோல் என் தந்தையார் பிராதில் அல்லது என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இந்த வழக்கில் கூறவில்லை. என் தாத்தா கே.சி கார்டன் வீட்டை விட்டு எப்போது வெளியேறினார் என்றால் 2007ம் வருடம் 4ம் பிரதிவாதி யுவராஜன் என் தாத்தாவை வற்புறுத்தி வீட்டை விட்டு வெளியேற்றினார், மேற்கூறிய விவரத்தை என் தந்தையார் பிராதில் அல்லது என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் சாட்சியத்தில் என் தாத்தா காசிராஜன் என் தந்தையாருக்கு கேசி கார்டன் வீட்டை செட்டில் செய்தார் என்றும் அதற்கு இணையாக என் அத்தைக்கு கெட்டினமல்லி கிராமத்தில் 27 சென்ட் நிலத்தை ஒதுக்கினார், அதை என் அத்தை விற்று பொன்னியம்மன்மேட்டில் ஒரு வீடு வாங்கிக்கொண்டார் என்று கூறியுள்ளேன், பொன்னியம்மன் மேடு வீட்டை வழக்கு அட்டவணை E சொத்தில் சேர்த்துள்ளேன், ஆனால் கேசி கார்டன் வீட்டை இந்த வழக்கு அட்டவணையில் வேண்டுமென்றே சேர்க்காமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல, அது தனிச்சொத்து அதுகுறித்து சிட்டி சிவில் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது. என் தாத்தா கேசி கார்டன் சொத்திற்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்த விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் என் தகப்பனார் சொல்லித்தான் எனக்கு தெரியும், எந்த வருடம் என்று எனக்கு ஞாபகமில்லை. என் தாத்தா ரத்து செய்ததை எதிர்த்து என் அப்பா சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் 2010ம்

வருடத்தில் அசல் வழக்கு எண்.2298/2010 ல் வழக்கு தொடர்ந்தார். வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளதா என்றால் வழக்கு நிலுவையில் உள்ளது. தற்போது வரை என் தாத்தா எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ரத்து ஆவணத்தை நீதிமன்றம் ரத்து செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா 2014ம் வருடம் கேசி கார்டன் சொத்தை குறித்து ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் என் பெயரில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது நீதிமன்றத்தில் முன் அனுமதி பெறாமல் என் அப்பா கேசி கார்டன் சொத்தை செட்டில்மெண்ட் செய்தது தவறு என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி யுவராஜன் என் தந்தை மீதும் என் மீதும் புகார் அளித்து அந்த புகார் எழும்பூர், தலைமை பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தில் சிசி எண்.5064/2023 ல் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், அது பொய்யான புகாராகும். கெட்டினமல்லி கிராமத்தில் எனக்கோ, என் தந்தைக்கோ அல்லது என் குடும்பத்தாருக்கோ ஏதாவது சொத்துக்கள் உள்ளதா என்றால் என் தந்தை தன்னுடைய சுய வருமானத்தில் வாங்கிய சொத்தை என் பெயரில் செட்டில்மெண்ட் செய்துள்ளார். கெட்டினமல்லி கிராமத்தில் என் தந்தையாருக்கு வயது 12 இருக்கும்போது என் தாத்தா அவர் பெயரில் சொத்து வாங்கினார் என்றால் சரியல்ல. கெட்டினமல்லி கிராமத்தில் ஒரு வீட்டு மனை என் தாத்தா அல்லது என் பாட்டி பெயரில் உள்ளது, அது எங்கள் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. என் தந்தையார் டன்லப் கம்பெனியில் வேலை பார்த்து எந்த வருடம் ஓய்வு பெற்றார் என்றால் 2010 லிருந்து 2020 வருடத்திற்குள் அந்த கம்பெனி லாக்டவுன்னில் இருந்தது, பணி ஓய்வு பெறவில்லை. டன்லப் கம்பெனி 1994ம் வருடத்தில் மூடப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. திரும்பவும் திறக்கப்பட்டு என் தந்தை அங்கே வேலை செய்தார். 1994க்கு பிறகு என் தந்தையார் டன்லப் கம்பெனியில் வேலை செய்தார் என்பதற்கு ஆதாரமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த ஆண்டு இஞ்ஜினியரிங் கல்லூரியில் படித்தேன் என்றால் 2010ம் வருடம் சேர்ந்தேன். நான் தனியார் பொறியியல் கல்லூரியில் படித்தேன். என் உடன் பிறந்தவர்கள் என் தம்பி உள்ளார். அவரும் இஞ்ஜினியரிங் படித்துள்ளார். என் தம்பி எந்த வருடம் கல்லூரியில் சேர்ந்தார் என்றால் 2010ம் வருடத்தில் சேர்ந்தார். தனியார் கல்லூரி என்றால் கல்லூரி கட்டணம் அதிகமாக இருக்கும், அதற்கு யார் கட்டணம் செலுத்தினார்கள் என்றால் என் தந்தை பால் வியாபாரம், மளிகைக்கடை, விறகு கடை

வைத்திருந்தார், அதில் வரும் வருமானத்தில் கட்டணம் செலுத்தினார். என்னை படிக்க வைக்கும்போது மளிகைக்கடை இருந்தது, தற்போது இல்லை. என் கல்லூரிக்கட்டணம் எல்லாம் என் தாத்தா காசிராஜன் தான் செலுத்தினார் என்றால் சரியல்ல. என் தாத்தா கேசி கார்டன் வீட்டை விட்டு வெளியேறிய பின்பு நானோ அல்லது என் தந்தையோ என் தாத்தாவை பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல, நான் மாதம் மாதம் என் தாத்தாவிற்கு ரூ.1000/- கொடுத்துவிட்டு அவரை பார்த்து வருவேன். என் தம்பி மற்றும் தந்தை தனித்தனியாக என் தாத்தாவிற்கு பணம் கொடுப்பார்கள். என் தாத்தா எந்த வயதில் இறந்தார் என்றால் 95 அல்லது 96 வயதிருக்கும், 100 வயது கூட இருக்கும். என் தந்தை அவர் தாயார் குமுதம்மாள் நிலத்தை விற்ற பணத்தில் சரிபாதியாக வாங்கிக்கொண்டு 2வது மற்றும் 3வது பிரதிவாதிகளின் பெயரில் உள்ள சொத்துக்களில் தவறாக உரிமை கோருகிறார் என்றால் சரியல்ல. என் தந்தையார் பொது சொத்துக்களில் இருந்து விற்ற பணத்தில் வாங்கிய சொத்துக்களை எல்லாம் இந்த வழக்கில் சேர்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்ததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

நேரம் 15.55 மணி

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.